பக்கங்கள் 8(?)

Registered as a ...

அன்பளிப்பு

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 | வள்ளுவர் ஆண்டு 2027 தை 20 சனிக்கிழமை (03-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 69

# மத்திய வங்கி கட்டடம் இடிந்து விழும் நிலை!

## நிலவறையிலிருந்து திடீரென தீச்சுவாலை

கொழும்பு, பெப்ரவரி 3

கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட பயங்கர வெடிகுண்டுத் தாக்குதலினால் பெரும் சேதமடைந்துள்ள ஸ்ரீலங்கா மத்திய வங்கியின் கட்டடம் எந்த நேரத்திலும் இடிந்து விழும் நிலையில் உள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அதனால் அந்தக் கட்டடச் சிதைவுக்குள் செல்வதோ அல்லது அங்கு மீட்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதோ இயலாத காரியம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

அக்கட்டடத் தொகுதியில் தங்கம் மற்றும் பண நோட்டுகள் சேமிக்கப்பட்டிருக்கும் நிலவறைப் பகுதியிலிருந்து நேற்று திடீரென தீச் சுவாலை எழுந்தது; அப்பகுதி எரிந்து கொண்டிருக்கின்றது.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஜனாதிபதி மாவத்தைப் பகுதி வெளியார் செல்வதற்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அருகில் ''ஹோட்டல் இன்ரர்க் கொன்டினன்ட்ரல்'' கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட பொலீஸ் பிரிவில் அனுமதிப்பத்திரம் பெறுவோர் மட்டுமே அப்பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

எனினும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் ஏற்பாட்டில் கொழும்புப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிலவறைக்குள் சிக்கியோர் கதி தெரியவரவில்லை

கொழும்பு, பெப். 3

குண்டு வெடிப்பால் அழிந்த மத்திய வங்கிக் கட்டடத்தின் நிலவறைக்குள் சிக்கியோர் எத்தனை பேர் என்பது குறித்தோ அவர்களின் கதி என்ன என்பது குறித்தோ உடனடியாகத் தெரிய வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நிலவறைக்குள் மீட்புப் பணியாளர்கள் இப்போதைக்கு நுழைய முடியாது என்பதால் அங்கு சிக்கியோரின் எண்ணிக்கையை நேரடியாக உடனே கண்டு பிடிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மத்திய வங்கியில் கடமைக்கு சமுகம் தரும் ஊழியர்கள் தமது வரவைப் பதியும் இயந்திரம் முற்றாக நாசமாகி விட்டதால் சம்பவம் நடந்த தினம் வேலைக்குச் சமுகமளித்த ஊழியர்களின் உத்தியோகபூர்வ பதிவையும் பெற முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## "கன்ரர்" ரக ட்டிரக்கே தாக்குதலுக்கு பயன்பட்டது

''கன்ரர்'' ரக ட்டிரக்கே வெடிகுண்டுடன் வந்து மத்திய வங்கியுடன் மோதியதாம்.

காலை 10-51 மணிக்கு மத்திய வங்கி பாதுகாப்பு அரண்களுக்கு அருகே மிக வேகமாக இந்த ட்ரக் வந்து நின்றது. சாரம் அணிந்த நால்வர் அதில் இருந்து குதித்து இறங்கி றொக்கட் லோஞ்சர்களைக் கொண்டு றொக்கட்டுக்களை மத்திய வங்கியை நோக்கி ஏவினர். சிலர் வங்கிப் பாதுகாப்பு நடவடிக்கையில் இருந்த அதிகாரிகளை நோக்கி சரமாரியாக சுட்டனர்.

இதே நேரம் ட்ரக் வேகமாய் பின்நோக்கி வந்து மத்திய வங்கி கட்டடத் தொகுதியின் கிராமிய அபிவிருத்தி வங்கி கட்டடத்தில் மோதியது. உடனே பாரிய குண்டு வெடித்தது — இவ்வாறு கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## செய்தியாளர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, பெப். 3

மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்காக நேற்றுமாலை கொழும்பு பாதுகாப்பு அமைச்சில் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டை உள்நாட்டு, வெளிநாட்டு செய்தியாளர்கள் புறக்கணித்தனர்.

இந்த மாநாட்டில் பங்குபற்றச் சென்றிருந்த பத்திரிகையாளர்கள், அதிகாரிகளின் குளறுபடியான போக்கை அடுத்து மாநாட்டைப் பகிஷ்கரித்தனர். (உ)

## 30 பேரின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, பெப். 3

மத்திய வங்கி குண்டு வெடிப்பில் காயமடைந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இன்னும் சிகிச்சைபெற்று வரும் 27C பேரில் 30 பேரின் நிலை மிகவும் மோசமாகியுள்ளதாக ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் திரு தரன்னி டி.சில்வா தெரிவித்தார்.

16 பேர் அவசரசிகிச்சைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோரில் 10 பேர் தமிழர்

கொழும்பு, பெப். 3

கொழும்பு மத்திய வங்கி மீதான வெடிகுண்டுத் தாக்குதலில் இறந்தவர்களில் பத்துப் பேர் தமிழர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமுற்ற ஆயிரத்து [illegible] கண் பார்வையிழந்துள்ளனர். (உ-7)

## குண்டுச் சத்தத்தினால் கொழும்பில் பதற்றம்!

### பாடசாலைகள் வெறிச்சோடின

கொழும்பு, பெப். 3

கொழும்பில் நேற்று அடுத்தடுத்து மூன்று வெடிச் சத்தங்கள் கேட்டதை அடுத்து பெரும் பதற்றம் நிலவியது புலிகள் மீண்டும் தாக்குதலை நடத்துவதாக வதந்தி பரவி இருந்ததே இதற்குக் காரணம் ஆகும்.

பெற்றோர்கள் பலர் பாடசாலைக்குச் சென்று தமது பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். வீதிகள் வெறிச்சோடின.

நாளை நடைபெற உள்ள சுதந்திர தினத்தை முன்னிட்டு, இராணுவ அணிவகுப்பின் போது வெடிக்க வைக்கப்பட உள்ள பீரங்கிகளை விசேட அதிரடிப்படையினர் பரீட்சார்த்தமாக வெடிக்க வைத்த போதே இந்த பதற்றம் ஏற்பட்டது.

உண்மை நிலையை தெரிவித்து, மக்களை அமைதிப்படுத்துவதற்காக அரசாங்கம் வானொலியின் உதவியை நாட வேண்டியதாயிற்று (இ-7)

## பண நோட்டுக்களுக்கு கொழும்பில் தட்டுப்பாடு

### வங்கிகளில் ரூ.10 ஆயிரம் மட்டுமே

கொழும்பு, பெப். 3

மத்திய வங்கி குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி செயல் இழந்திருப்பதை அடுத்து —

தலைநகர் கொழும்பில் பணநோட்டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, பணப் புழக்கம் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏற்கனவே எல்லாளன்படை எச்சரித்திருந்ததாம்!

சாவகச்சேரி, பெப். 3

கடந்த புதன்கிழமை — மத்திய வங்கியின் முன்பாக குண்டுவெடித்த தினத்தன்று — கொழும்பில் இரு தாக்குதல்களை நடத்தப்போவதாக ''எல்லாளன் படை'' என்ற அமைப்பு அனுப்பிய எச்சரிக்கைக் கடிதம் தமக்குக் கிடைத்த

[6 ஆம் பக்கம் பார்க்க]

# கிரிக்கெட் போட்டியைவேறு இடத்துக்கு மாற்றுமாறு இரு நாடுகள் கோரிக்கை

### இலங்கைக்கு இக்கட்டானநிலை

கொழும்பு, பெப். 3

கொழும்பில் நடைபெறவிருக்கும் உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளை வேறு இடத்துக்கு மாற்றுமாறு ஆஸ்திரேலியா, மேற்கு இந்திய கிரிக்கெட் அணிகள் கேட்டுள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளின் கூட்டுக் குழுவிடம் இந்த இரு நாடுகளும் இக்கோரிக்கையை விடுத்திருப்பதாக சர்வதேச கிரிக்கெட் குழுவின் தலைமை செயல் இயக்குநர் டேவிட் ரிச்சேர்ட் தெரிவித்தார்.

இதனிடையே உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகளை நடத்த வசதியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிரிக்கெட் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டால் அது இலங்கையின் கௌரவத்தை பாதிக்கும் என்று இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தலைவர் ஆனந்த புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை வைத்துக் கொண்டு நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பு சீர்குலைந்து விட்டது என்று கருதக் கூடாது என விளையாட்டுத்துறை அமைச்சர் திஸநாயக்க தெரிவித்தார். (இ-3)

# கோக்குவில் கிழக்கில் மீண்டும் தாக்குதல்

### சேதவிவரம் தெரியவரவில்லை

சாவகச்சேரி, பெப். 3

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்குப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்தாக்குதல் தொடர்பான மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

இந்த தாக்குதலை பாதுகாப்புப் படையினரும் ஊர்ஜிதம் செய்தனர்.

கடந்த இரண்டு வாரங்களில் கொக்குவில் கிழக்கில் புலிகள் நடத்திய இரண்டாவது தாக்குதல் இதுவாகும். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பற்றறி சார்ஜ் செய்வதற்கு தேவையான சகல உபகரணங்களும் (ஊசிலி மெஷின், மோட்டர், சார்ஜ்ஜர் போன்றவை) விற்பனைக்குண்டு. தொடர்பு: நவம் மின் அகம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (40556)

1995 ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வர்த்தகம் (O/L) வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 8, நவீன சந்தை (உட்புறம்) சாவகச்சேரி. (சி-2954)

நல்ல நிலையில் உள்ள சிங்கர் தையல் மைசின், பல் வைத்தியரால் பாவிக்கப்படும் கதிரை (Dental Chair), மேசை, மின் விசிறிகள் உடன் விற்பனைக்கு உண்டு. இல:525 C/o உதயன், சாரசாலை தெற்கு. 40557)

## வாடகைக்கு

பொருள்கள் வாடகைக்கு கொடுக்குமிடம். பீங்கான் ரம்லர், தண்ணிர் ரம்லர், சில்வர்றே, பிளாஸ்ரிக் பாய்கள், கறிவாளிகள், ஐஸ்கிறீம் கப்ஸ், சமையல் பாத்திரங்கள் இன்னும் பல. வெள்ளை மாளிகை, பெரிய அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி. (40050)

## தவறிவிட்டது

29-1-96 மிருசுவில் சந்திக்கும், சிவகாமி அம்மன் ஆலயத்திற்கும் இடையில் முருகேசு யோகராசா என்பவருடைய அடையாள அட்டை, குடும்ப அட்டை, பங்கீட்டு அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அறியத்தரவும். மு. யோகராசா, பெரிய நாவலடி, மிருசுவில் (சிவகாமி அம்மன் ஆலயத்திற்கு அருகாமை). (40047)

## தென்மராட்சி அதிபர் கூட்டம்

தென்மராட்சிப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது (இ-3)

## சினைப்படுத்தல் நிலையம் திறப்பு விழா

காராளி செயற்கை முறை சினைப் படுத்தல் நிலையம் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி இரத்தினபுரம், யாழ். வீதியில் திறந்து வைக்கப்படுகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிலையம் இயங்கும் (இ)

---

மாவிலவக்கந்தன் சி.க.வ.கூ. சங்கம்

## மாதாந்தக்கூட்டம்

காலம்: 4-2-96 ஞாயிறு மு.ப. 9-30 மணி
இடம்: தலைவர் திரு. க. சுப்பிரமணியம் அவர்களின் இல்லம்
மணங்குளப்பிள்ளையார் கோவிலடி,
கணேசன் வீதி,
பாரதி சனசமூகநிலைய அருகாமை, நுணாவில்.

தயவு செய்து சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகந்தரவும்.

(40602) செயலாளர்.

---

## நன்றியும் வணக்கமும்

எனது சேவைக் காலத்தில், கல்லூரியின் வளர்ச்சியில் கரிசனையோடு உறுதுணையாக நின்று ''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்'' சகல துறைகளிலும், ஒருமித்தும் தனித்தும் வாழ்த்துக்கள் வழங்கி, ஒத்துழைப்பு நல்கிய மத நிறுவனங்கள், கல்விச் சமூகத்தினர், சமூக நிறுவனங்கள், தோழமைக் கல்லூரிகள், நலன் விரும்பிகள், நாட்டுப்பற்றாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார், துணை ஆளணியினர், பழைய மாணவர்கள், விளையாட்டுத் துறையினர் ஆகியோருக்கும், இடம்பெயர்ந்து வந்தபோது எம்மை அன்புடன் ஆதரித்து வசதிகளைச் செய்து தந்தோருக்கும் எனது அன்புகனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்''

இங்ஙனம்,
நா. க. சண்முகநாதபிள்ளை
பிரியாவிடை பெறும் அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(4063)

---

நெல்லியடியில்,
27 — 1 — 96 முதல் இயங்குகின்றது!

## யாழ் மெடி கிளினிக் (YARL MEDI CLINIC)

★ நோயாளரின் வசதி கருதி நெல்லியடி மத்திய பேரூந்து நிலையத்துக்கு மிகச் சமீபமாக கொடிகாமம் வீதியில் அமைந்துள்ளது.
★ யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களினால் தினசரி பி.ப. 4.00 — 8.00 வரை நோயாளர்கள் பார்வையிடப்படுவர்.
★ முன்கூட்டியே பதிவுகள் மூலம் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை வேறு நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

— நிர்வாக இயக்குனர்.

(சி/3193)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
(இளைப்பாறிய ஒய்வூதிய பகுதி பிரதம லிகிதர்)

தோற்றம்: 11 — 08 — 1929 மறைவு: 05 — 01 — 1996

நாளை [04-02-96] ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (40112)

---

# புதிய ராதிகா நகைமாடம்

யாழ்நகர் 189, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம்
பிரதான வீதி, நெல்லியடியில் 4-2-96 முதல்
இயங்க உள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## புதிய ராதிகா நகைமாடத்தினர்

பிரதான வீதி,
நெல்லியடி. (40113)

---

கச்சாய்

## கண்ணகை அம்மன் ஆலயம்

விசேட வேத வேள்வியும்
அமைதி வேண்டும் பிரார்த்தனையும்

★ ஞாயிறு (4-2-96) இரவு 10 மணிக்கு — யாகமும் பிரார்த்தனையும் ஆரம்பம்.
★ திங்கள் (5-2-96) அதிகாலை தொடக்கம் விசேட அபிஷேக ஆராதனைகள், அர்ச்சனைகள் நடைபெற்று வேத வேள்வியும் பிரார்த்தனையும் நண்பகல் 1 மணிக்கு நிறைவுறும்,
★ அதனைத் தொடர்ந்து அன்னதானம்.

அல்லலுறும் மக்களுக்கு அமைதியும் அன்பும் வேண்டி நடைபெறும் இவ்விழாவில் அடியார்கள் அனைவரும் வந்து பங்குபற்றி அன்னையின் அருள் பெறுக.

அம்பிகையைச் சரணடைந்தால்
அதிக வரம் பெறலாம்

(சி. 4006) ஆலய பரிபாலன சபையினர்

---

உ
அரி ஓம் ஸ்ரீ நாராயணாய நம

## ''ஸ்ரீ நாராயணர் திருவந்தாதி'' நூல் வெளியீடு

அத்துடன்
(ஸ்ரீ நாராயணர் கவசமும், ஸ்ரீ மனோன்மணி கவசமும் வெளியிடப்படும்)

மெய்யன்பர்களே,

ஈழத் தமிழினத்தின் விடிவு நலனுக்காக பிரார்த்தனை செய்து, அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரால் எழுதப்பட்ட மேற்படி நூல்வெளியீட்டு விழா 04-02-1996 அன்று ஞாயிற்றுக்கிழமை (தைப்பூசத்தன்று) சாவகச்சேரி (கச்சாய் வீதி) வீரபத்திரர் சுவாமி தேவஸ்தான முன்றலில் பிற்பகல் 3-00 — 5-30 மணிவரை திரு. கனக. ஜெயரத்தினம் (அதிபர், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி) அவர்கள் தலைமையில் நிகழும். அன்பர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு வேண்டுகிறோம்.

குறிப்பு:

எமது அன்பர்களின் தற்போதைய விலாசம் அறியமுடியாமையால் தனித்தனி அழைப்பிதழ் அனுப்பமுடியவில்லை என்பதைத் தயவாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுபம்.

ஐ.கோ. சந்திரசேகரம்
காரியதரிசி
(40605) நூல் வெளியீட்டுச் சபை

---

## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி நாதன் கபேயில், கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகா, வேலணை பெருந் தெருக்கள் திணைக்களம் ஆகியவற்றில் கடமையாற்றிய சேவைச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் உட்பட முக்கிய ஆவணங்கள் அடங்கிய பிளாஸ்ரிக் ''பாக்'' கைமாறி எடுத்துப் செல்லப்பட்டுள்ளது. எடுத்தவர் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

கௌரி கிளினிக்,
யாழ். வீதி, கிளிநொச்சி.

(சி-3198)

---

சாவகச்சேரி

## லயன்ஸ் கழகம்

நடத்தும்

## கண் சிகிச்சை முகாம் II பளை

இடம்:- பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு மண்டபம்
காலம்:- 04-02-1996 ஞாயிறு காலை 9.00 மணி

★ கண் பரிசோதனை
★ இலவச கண்ணாடி வழங்கல்
★ இரத்த அமுக்க பரிசோதனை
★ சலரோக பரிசோதனை

கண் வைத்தியர்கள்:
டாக்டர் செல்வி மங்கை சரவணமுத்து
டாக்டர் திருமதி அனுசியா சிறிதரன்

இன்னும் லயன்ஸ் கழக வைத்தியர்கள் பரிசோதிப்பார்கள்

முக்கிய குறிப்பு; இடம்பெயர்ந்துள்ள லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.

(சி-4005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மத்திய கல்லூரி அதிபர்

# உயர்திரு. நா. க. சண்முகநாதபிள்ளை

அவர்களின்

# ★ சேவைநலன் பாராட்டுச் சிறப்பிதழ் ★

03-02-1996

## ஆசியுரை

பெரும் தகையுடையீர்

யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபராக இருந்து ஓய்வுபெறும் திரு. சண்முகநாதபிள்ளை அவர்களுடைய சேவை பாராட்டுதற்குரியது. யாழ்ப்பாணத்தில் மணிமகுடமாகத் திகழும் கல்விப்பீடங்களில் மத்திய கல்லூரியும் தனி இடத்தைப் பெற்றுள்ளது.

தமிழர்களுடைய கல்வி வளத்தை அன்று தொடக்கம் இன்றுவரை பேணி வளர்த்து வந்தது டன் கல்லூரியின் வளர்ச்சியிலும் அதிபரின் பங்களிப்பு போற்றுதற்குரியது.

திரு. சண்முகநாதபிள்ளை அவர்களுடைய சேவையைப் பாராட்டி அவரும் அவருடைய குடும்பமும் நீடூழி காலம் வாழ்க இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு."

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## நயினை ஈன்ற நயத்தகு அதிபர்

நயினை நாகபூசணித் தாயின் அருளமுதத்தை வாரி, வாரி விழுங்கியும் வழங்கியும் மகிழ்ந்தவர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள். இதன் பயனாகவே கல்வியிலும், கடமையுணர்விலும் கடவுள் நெறியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

நூற்றி எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு கண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை அலங்கரித்த அதிபர்களில் இப்பெரியாரும் ஒருவர். இவர் இம் மண்ணின் துயர் துடைக்கப் பெரும் பங்கு எடுத்துக் கொள்வார் என்ற நம்பிக்கையோடு எனது உளம் நிறைந்த வாழ்த்தை வழங்குகிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

## பரியோவான் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விப்பாரம்பரியங்களோடு ஒன்றரை நூற்றாண்டுக்கு மேலாக நெருங்கிய தொடர்புடையனவாக யாழ். மத்திய கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி ஆகிய இரண்டும் விளங்குகின்றன. இந்த நெருக்கம் இரு கல்லூரிகளுக்குமிடையே துடுப்பாட்ட நிகழ்வு மூலம் காலம் காலமாக வளர்ந்து வந்துள்ளது. இந்த நட்பின் அடையாளமாக மத்திய கல்லூரி அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெறும் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களைப்பற்றி ஓர் ஆசிச்செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது சமூகத்தில் சிறந்த அனுபவம் வாய்ந்த ஒரு கல்விமானாகவும், ஆளுமைத் திறன் வாய்ந்த நிர்வாகியாகவும் விளங்குபவர்களுள் திரு. நா. க. சண்முகநாதபிள்ளையும் ஒருவராவார். இவர் சமூக முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கல்விக்கு ஓர் வழிகாட்டியாக விளங்குகின்றார் எனக் கூறினால் அது மிகையாகாது.

கவிதை நயம் வாய்ந்த இவரது பேச்சுக்கள் எல்லோர் மனதையும் கவர்வதோடு கருத்து மிக்கவையாகவும் அமைந்தன

சி. தனபாலன்,
அதிபர்
யாழ். பரியோவான் கல்லூரி

## இவரைப் பற்றி.....



ஆரம்ப கல்வி — நயினாதீவு, நாகபூஷணி
**1940 — 1944** — வித்தியாசாலை.
யாழ்ப்பாணம் - நமசிவாய வித்தியாசாலை, யாழ்ப்பாணம் நாவலர் வித்தியாசாலை.

இடைநிலைக் கல்வி — யாழ்ப்பாணம்
**(1945 — 1955** மத்திய கல்லூரி.
(நாவன்மை, கவிதை, மெய்வல்லுனர் பேறுகள்.)

உயர் கல்வி — தூயவளன் கல்லூரி - திருச்சி - சென்னை பல்கலைக்கழகம்
**(1959 — 1960)** விளையாட்டுத்துறை முதல்வர், தமிழ் மன்றம், செயலாளர் - விஞ்ஞான சங்கம்.

கல்வித் தகைமை — B. Sc, Dip-in-Ed.
ஆசிரிய ஆலோசகர்.

தொழுற் தகைமை— S. L. E. A. S. - II

உதவி ஆசிரியர் 18 வருடம் — பதுளை-தூயவளன் கல்லூரி, பண்டாரவளை, வவுனியா வித்தியானந்த கல்லூரி-முள்ளியளை, யாழ் நயினாதீவு மகா வித்தியாலயம்' நயினாதீவு.

கொத்தணி அதிபராக 06 வருடம் — நயினாதீவு கொத்தணி, யாழ் நகர கொத்தணி.

அதிபராக 18 வருடம் — நயினாதீவு மகா வித்தியாலயம் - 13 வருடம், யாழ். மத்திய கல்லூரி - 05 வருடம்.

சிறப்பு அம்சங்கள் — அகில இலங்கை கவிதைப் போட்டி —
**1963** — 3 ஆம் இடம்.
**1972** — 1 ஆம் இடம்.
**1975** — 1 ஆம் இடம்.
**1986** — 3 ஆம் இடம்.

யாழ். மாவட்ட சிறந்த அதிபர் சான்றிதழ் — **1991**.

வகித்த பிற பதவிகள்:-
செயலாளர் - சப்த தீவு திவ்யஜீவன சங்கம்.
காப்பாளர் - தீவகச் செஞ்சிலுவை சங்கம்.
காப்பாளர் - யாழ். உதைபந்தாட்டச் சங்கம்.
தலைவர் - யாழ் மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம்.
செயலாளர் - கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரச அதிபர் வாழ்த்து

யாழ் மத்திய கல்லூரியின் அதிபராக இருந்து இளைப்பாறுகின்ற திரு. நா க. சண்முகநாதபிள்ளை அவர்கள் தமிழர் சமூகத்திற்கும், தமிழ் இலக்கியத்துறைக்கும் தாம் கல்வி கற்றுப் பின்னர் அதிபராகவும் இருந்து ஆற்றிய சேவைகளையும் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன.

இவருடைய பாடசாலைக் கல்வியில் பெரும் பகுதியை யாழ் மத்திய கல்லூரியிலேயே பெற்றார். இக்கல்லூரி மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த இக்கட்டான நேரத்தில் அதன் அதிபர் பதவியை ஏற்று, அனைவரையும் அணைத்து நடக்கும் இனிய சுபாவத்தால் பலரது உதவிகளையும் பெற்று, கல்லூரியின் கட்டடங்களைப் புனரமைத்துப் பாடசாலையை வழிநடத்தினார்.

செ. பத்மநாதன்
மாவட்ட செயலாளரும்,
அரச அதிபரும்.

## மனிதநேயம் மிக்கவர்

கடந்த ஐந்து ஆண்டுகளாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறும் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை ஒரு விஞ்ஞானப் பட்டதாரி; நாடறிந்த கவிஞர்; மேடைப்பேச்சாளர்; கல்விமான். இத்தனைக்கும் மேலாக மனிதநேயம் மிக்க நிர்வாகி.

தான்கல்விகற்ற பாடசாலையிலே அதிபராகச் சேவையாற்ற வேண்டும் என்ற பேரவாவினால் 1990ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கல்லூரியைப் பொறுப்பேற்றவர். உடைந்து சிதைந்த நிலையிலிருந்த கட்டடங்களைத் திருத்தியமைத்துப் புதுப்பொலிவு பெற வைத்தார். கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள், விளையாட்டுக்கள், கழகங்கள், மன்றங்கள், கல்லூரி விழாக்கள் சிறப்புற நடைபெறுவதற்கும் அதன் மூலம் கல்லூரியின் புகழ் ஓங்குவதற்கும் வழிசமைத்தார்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம், பெற்றோர் நலன்விரும்பிகள் ஆகியோருடன் நெருங்கிய உறவைப்பேணிக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்.

விளையாட்டுக்கள், கழகங்கள், மன்றங்கள் மற்றும் புறபாடவிதானச் செயற்பாடுகள் மூலம் மாணவர்கள் தமது பிற்கால வாழ்க்கைக்குத் தேவைப்படும் பல்வேறுபட்ட திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு உதவினார்.

அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் தொடர்ந்தும் இவரின் சேவை எமது கல்லூரிக்குக் கிடைக்கவும், இவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமையவும் எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

செ. சிவரூபன்
பிரதி அதிபர்,
தலைவர், ஆசிரிய வட்டம்.

## அதிபர் பணியில் நிறைவு கண்டவர்

திரு. சண்முகநாதபிள்ளை ஒரு நல்ல மனிதர்; எவரின் மனதையும் புண்படுத்தாது, விட்டுக் கொடுத்து "அடியார்க்கும் அடியேன்" என்ற தத்துவத்துடன் வாழ்ந்து வெற்றி கண்டவர். கல்வித்துறையில் தனக்கே உரித்தான தனித்துவப்பாணியில் பணியாற்றி நிறைந்த மனதுடன் ஓய்வு பெறுகிறார். கல்வித்துறைக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு நன்றிகூறும் இச்சந்தர்ப்பத்தில் அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இ. சிவானந்தன்,
வலயம் 1 கல்விப்பணிப்பாளர்

சிறப்பிதழ் தொடர்ச்சி 4 ஆம் பக்கத்தில்

### சிறப்பிதழ் அமைப்பு

இ. ராஜாராம்
தலைவர்

கா. மாணிக்கவாசகர்
செயலாளர்

**பழைய மாணவர் சங்கம்**

★ எமது நல்வாழ்த்துக்கள் ★

**லாவண்யா**

பல் - மூக்கு கண்ணாடி அகம்

A G A காரியாலயம் முன்பாக,
கண்டி வீதி — சாவகச்சேரி.

பிரதான வீதி,
நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்புநிதி மீளளிப்பு: தேர்ந்தெடுக்கப்பட்டோர்

தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளல் 1995, முதற்கட்ட கடன் மீளளிப்பின்போது மீளப் பெறாத மக்களின் நலன் கருதி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கடன் பத்திர தொடர்பு எண்ணும் முழுப்பெயரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக உதயன் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும். இப்பட்டியலில் மற்றும் ஒரு பகுதி இன்று பிரசுரமாகிறது.
(நேற்றைய தொடர்ச்சி)

| யா/வெ | நல்லூர் |
|---|---|
| 0467 — | இரத்தினம் கணேசலிங்கம் |
| 0472 — | தங்கம்மா சிவலிங்கம் |
| 0490 — | சண்முகம் பத்மநாதன் |
| 0501 — | குமாரசாமி சிவசுப்பிரமணியம் |
| 0515 — | இரத்தினஜோதி பரஞ்சோதி |
| 0518 — | இராஜேஸ்வரி அரியரட்ணம் |
| 0524 — | பாலசிங்கம் சர்வகுணானந்தன் |
| 0527 — | சிவஞானவல்லி நவரத்தினம் |
| 0532 — | சீவரட்ணம் பவானந்தன் |
| 0562 — | பாலசுப்பிரமணியம் தர்மரத்தினம் |
| 0570 — | வாசுகி சிறிஸ்கந்தரூபன் |
| 0574 — | பிறேமலோஜினி சண்முகரட்ணம் |
| 0650 — | அன்னலட்சுமி குணசிங்கம் |
| 0659 — | செல்லத்துரை பொன்னுத்துரை |
| 0700 — | விசுவலிங்கம் மகாலிங்கம் |
| 0720 — | வைரமுத்து சிவசம்பு |
| 9721 — | கந்தையா கருணாகரன் |
| 0732 — | புஸ்பமலர் இராஜசேகரம் |
| 0740 — | ஜெயந்தா ரவீந்திரன் |
| 0741 — | அனுஷா யோகானந்தன் |
| 0750 — | நாகேஸ்வரி இராசரத்தினம் |
| 0751 — | சுப்பிரமணியம் கதிரவேலுப்பிள்ளை |
| 0805 — | தயாநிதி திருநாவுக்கரசு |
| 0809 - | சுகிர்தலோசனா துரைராசா |
| 0826 — | சின்னப்பு அப்புத்துரை |
| 0830 — | சத்தியபாமா சடாச்சரநாதன் |
| 0854 — | தர்மவதி சுப்பிரமணியம் |
| 0863 — | மகேஸ்வரி பஞ்சலிங்கம் |
| 0867 — | இராமச்சந்திரன் ரமேஸ் |
| 0884 — | மஞ்சுளா தில்லைச்சந்திரன் |
| 0889 — | நாகமணி சிவசுப்பிரமணியம் |
| 0895 — | சுப்பிரமணியம் சுபதாசன் |
| 0906 — | சோமசுந்தரம் கெங்காதரன் |
| 0907 — | இராசதுரை இராசநாயகம் |
| 0913 — | சுமதி சபேசன் |
| 0937 — | செல்லம்மா சின்னத்துரை |
| 0951 — | பாக்கியேஸ்வரி கண்முகநாதன் |
| 0974 — | சின்னத்துரை சிறிநேசா |
| 0989 — | செல்வானந்தி விஜசிறி |
| 0990 — | ஜெயசிங்கம் அமேரநாத் அசாக்குமார் |
| 1022 — | செல்லையா சண்முகராசா |
| 1024 — | பொன்னையா கோவிந்தசாமி |
| 1058 — | பொன்னையா பாலசுப்பிரமணியம் |
| 1108 — | சிவபாக்கியம் சபாரத்தினம் |
| 1117 — | ஜெகசோதி பாஸ்கல் ஜெயானந்தன் |
| 1136 — | வினாசித்தம்பி பாலச்சந்திரன் |
| 1152 — | இராஜேஸ்வரி நடராசா |
| 1184 — | அசோகராணி நடராசா |
| 1185 — | கணபதிப்பிள்ளை கணேசரட்ணம் |
| 1191 — | மாருதப்புரவீகவல்லி பாலசிங்கம் |
| 1217 — | திலகராணி மயில்வாகனம் |
| 1221 — | துரைசாமி பாலசிங்கம் |
| 1266 — | ரஜனி ஏகாம்பரநாதன் |
| 1267 — | வசந்தி பாலரட்ணம் |
| 1272 — | சுசிலா சிறிபத்மநாதன் |
| 1289 — | பவளம் முத்துலிங்கம் |
| 1298 — | சோதிப்பிள்ளை முத்துலிங்கம் |
| 1328 — | பொன்னையா கணேசானந்தன் |
| 1342 — | செல்வராணி துரைலிங்கம் |
| 1349 — | தனரஞ்சிதமணி சிவகுருநாதன் |
| 1379 — | சகுந்தலாதேவி இராஜமனோகரன் |
| 1396 — | கமலாம்பிகை சிவகுமாரதாசன் |
| 1434 — | பாலகௌரி ஜெகதீரன் |
| 1490 — | வைத்திலிங்கம் ரட்ணகுமார் |
| 1560 — | சரஸ்வதி நடராசா |
| 1664 — | சற்குணதேவி கிருஷ்ணமூர்த்தி |
| 1695 — | கந்தையா குணசிங்கம் |

| யா/உ | உடுவில் |
|---|---|
| 116 — | முத்தையா ஸ்ரீபன் |
| 155 — | தம்பிப்பிள்ளை சோமசுந்தரம் |
| 296 — | ஏரம்பு பாலசுப்பிரமணியம் |
| 346 — | இராசா சதானந்தன் |
| 414 — | சந்திரவதனி சண்முகலிங்கம் |
| 430 — | மயில்வாகனம் சந்திரசேகரம் |
| 455 — | அன்னராணி சிவலிங்கம் |
| 459 — | சகுந்தலாதேவி சிறீஸ்கந்தராஜா |
| 680 — | சின்னையா மாசிலாமணி |
| 728 — | சுப்பையா இரத்தினசபாபதி |
| 755 — | வைரமுத்து சிவநேசன் |
| 762 — | கார்த்திகேசு சிவபாலசிங்கம் |
| 775 — | நடராசா செல்வராசா |
| 869 — | சுப்பையா கந்தசாமி |
| 994 — | தங்கம்மா தர்மலிங்கம் |
| 1031 — | சின்னையா தர்மராசா |
| 1122 — | வைத்திலிங்கம் தனபாலசிங்கம் |
| 1209 — | இராமநாதன் யோசேப் நவரத்தினம் |
| 1308 — | சின்னத்துரை யோகேஸ்வரன் |
| 1325 — | பத்மாசனி சர்வானந்தன் |
| 1345 — | செல்லையா சிவஞானம் |
| 1362 — | ஆனந்தபாஸ்கரி விக்னேஸ்வரன் |
| 1562 — | கந்தையா ஆறுமுகம் திருமுருகன் |
| 1670 — | கார்த்திகேசு சுப்பையா |
| 1671 — | இராசதுரை செல்வராசா |

# உயர்திரு நா. க. சண்முகநாதபிள்ளை சேவை நலன் பாராட்டுச் சிறப்பிதழ்

## பாரம்பரியம் பேணியவர்

எமது கல்லூரி 1983 முதல் இன்று வரை பல நெருக்கடியான காலங்களில் சிதைவுற்றும் மீண்டும் பொலிவுற்றும் வந்த வேளையில் 1990 ஆம் ஆண்டு இக் கல்லூரியின் முதலாவது இந்து மத பழைய மாணவ அதிபராக பொறுப்பேற்ற பெருமையை திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள் பெற்றுள்ளார்.

இவர் சேவையாற்றிய நாள்களில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரோடு இணைந்து பாரம்பரியத்தினை பேண உதவினார். இக் காலத்தில் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினது முயற்சியால் எமது கல்லூரி தேசிய கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. கல்லூரியின் 175 ம் ஆண்டு நிறைவு விழாவினை கொண்டடிய எமது பழைய மாணவர் சங்கத்திற்கு உற்சாகம் அளித்தார். இவ் விழாவின் போது கலைமகளிற்கு உகந்த வழிபாட்டிடம் ஒன்றினையும், கல்லூரியின் நிறுவனர்களை நினைவுகூர்ந்து மெதடிஸ்த வழிபாட்டிடம் ஒன்றினையும் எமது பழைய மாணவர் சங்கத்தினருக்கு ''அரும் பொருள் அகம்'' ஒன்றையும் உருவாக்கித் தந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சாதனைகளை மன அடக்கத்துடனும் இனிய பண்பான சுபாவத்தினாலும் செயலாற்றிய இவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் எமது கல்லூரிக்கும் எமது சமூக கல்வி வளர்ச்சிக்கும் தொடர்ந்தும் சேவையாற்றுவார் என்ற நம்பிக்கையுடனும், சகல தியாக மிக்க பெரு வாழ்வுடன் வாழ எல்லாம் வல்ல கோட்டை முனீஸ்வரப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

இ. இராசாராம்
தலைவர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ் மத்திய கல்லூரி.
யாழ். பரியோவான் கல்லூரி.

## மத்தியின் மைந்தன்

1990ஆம் ஆண்டுப் போராட்ட நிகழ்வால் அல்லலுற்றுப்போன எமது பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்க எவரும் முன்வராத வேளையில், தாம் கற்ற பாடசாலையில் அதிபராகும் அரிய சந்தர்ப்பத்தை திரு. நா. க. சண்முகநாதபிள்ளை பெற்றார்.

மாணவர்களின் பெற்றோராகிய பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், பழைய மாணவர்களும், சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து சின்னாபின்னப்பட்டிருந்த எமது பாடசாலையை மீண்டும் புனரமைக்கத் தம்மாலான யாவற்றையும் செய்தனர். எமது தாயகக் கல்லூரி மீண்டும் பொலிவு பெற்றது.

ஆயினும் ஐயகோ! திரு. சண்முகநாதபிள்ளை அவர்கள் பதவியேற்றபோது கல்லூரி எந்த நிலையிலிருந்ததோ அவர் கல்லூரியை விட்டு விலகுகின்றபோது கல்லூரி அதே நிலைக்குச் சீர்குலைந்து பூண்டோடு இடம்பெயர்ந்து விட்டதே.

ந. செல்வநாயகம்,
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## திறமை மிக்கவர்

கல்வி உலகில் கடந்த பல ஆண்டுகளாக அயராதுழைத்த யாழ். மத்திய கல்லூரி அதிபர் உயர்திரு. நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள் அறுபதாவது வயதெய்தி கல்லூரி அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறும் இவ்வேளையில், அவர்கள் ஆற்றிய பலதரப்பட்ட சேவைகளை நினைந்து அவர்களைப் பாராட்டுவதில் நானும் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சிறப்பாக கடந்த நான்கு வருடங்களாக தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் செயலாளராக மிகத் திறமையுடனும், பொறுப்புணர்வுடனும், சாதுரியமாகத் தமது கடமைகளைச் சமுத்திரமாய் நிறைவேற்றிய செயல் வீரர். தமிழ் மக்களின் அழிவில்லாத சீரிய செல்வமாகிய கல்வியைப் போர்க்கால இடையூறுகள் மத்தியிலும் வளர்ப்பதற்கு தனது ஆற்றல்களையும் சக்தியையும் தயங்காது அர்ப்பணித்ததை யாவரும் அறிவர்.

யாவருடனும் பண்புடனும், புரிந்துணர்வுடனும் பழகும் அவரின் இனிய சுபாவம், அவருடன் சேர்ந்து செயலாற்றுவதற்குப் பக்கபலமாக இருந்ததென்பதற்கு சான்று பகரும் நான், தமிழ் இனத்தின் விடிவிற்கும் அவர் தொடர்ந்து தொண்டாற்றுவார் எனும் நம்பிக்கையுடன் இறையாசிர் வேண்டி நிற்கின்றேன்.

வண. பிதா. G.A. பிரான்ஸிஸ் யோசவ்.
தலைவர், தமிழீழக் கல்விப் பேரவை.
[illegible]
கரவெட்டி.

## சோதனையின் மத்தியில் சாதனை படைத்தவர்

சீர்பூத்த யாழ்நகரின் மத்திய கல்லூரி
பார் போற்றும் மாணவரை உருவாக்கும் நிதியம் அது
கோட்டையடிப் போரினிலே சீர் குலைந்த கலயமதை
பாட்டினிலே புகழுமாறு உருவாக்கி வைத்த செம்மல்
மாவட்டக் கல்லூரிகள் துடுப்பாட்டச்சங்கங்கள்
பாராட்டும் தலைவனாகி புகழ் படைத்த தலைவ
ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றி ஒன்று தொட்டு
நாவாலும் செயலாலும் மாணவரை வழிநடத்தி
யாழ்ப்பாணக் கலையகத்தில் முன்னணியில் வைத்தவரே
எண்ணற்ற ஆண்டு வாழ்ந்து குடும்ப நலம் பலவும் பெற
கண் மகிழ்ந்து வாழ்த்துகிறோம் தோன்றலே வாழி!
வாழிய என்று வாழ்த்தும்
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நாமே.

கா. உருத்திரசுந்தரம்
செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

## சிறந்த அதிபர் வரிசையில்

யாழ். குடாநாட்டின் கல்வி வரலாற்றிலே பல அதிபர்கள் அவ்வப்போது தோன்றிச் சென்றிருக்கின்றார்கள். அவ்வரிசையிலே இன்று சிறப்புப் பெறும் பேறுடையவராகத் திகழ்கின்றார் யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் திரு. சண்முகநாதபிள்ளை அவர்கள். நெருக்கடி நிறைந்த இக்கட்டான காலநிலையிலும் கோட்டையில் இருந்து அவ்வப்போது எறிகணைகள் பள்ளியைப் பதம் பார்க்கும் ஆபத்தான நேரங்களிலும் மத்திய கல்லூரிக்கு அதிபராகி, தம் அதிபர் பணியிலே பல சாதனைகள் படைத்த செயல் வீரன் இவர். கட்டடங்கள் இடிந்த நிலையிலும் தளபாடங்கள் பற்றாக்குறையானபோதிலும் அவற்றை சீர்திருத்தி கல்லூரியை பழைய நிலைக்கு உயர்த்திய பெருமை இவரையே சாரும்.

இவரது காலம் மத்திய கல்லூரி விளையாட்டுத்துறையில் சகல வகைகளிலும் மேன்மை பெற்று விளங்கிற்று.

திரு. சண்முகநாதபிள்ளை ஓய்வு பெறுகின்றபோதிலும் கல்வித்துறைக்குத் தொடர்ந்து பணியாற்றி நீண்டு வாழ வாழ்த்துகிறேன்.

சி. தியாகராசா,
விளையாட்டுத்துறை பணிப்பாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

## நீங்கா நினைவில் நிற்பவர்

எமது கல்லூரி அன்னையின் மடியிலேயே பயின்று பின்னர் எமது அன்னைக்கே சேவை செய்யும் நோக்குடன் அதிபராக இதுவரை காலமும் கடமையாற்றி, தற்போது ஓய்வு பெறும் கவிஞரும், கலைஞரும், கல்விக் களஞ்சியமுமான மதிப்பிற்குரிய நா. க. சண்முகநாதபிள்ளை ஓய்வு பெறுவது கல்லூரித்தாய்க்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஓர் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

எமக்கு அதிபராக மட்டுமன்றி அன்பான வழிகாட்டியாகவும், அறிவுக் கதவைத் திறக்கும் குருவாகவும், நண்பனாகவும் பல கோணங்களில் எமக்கு காட்சியளித்தார் எமது அதிபர். அவர் சேவையிலிருந்து நீங்கினாலும் அவர் தம் நினைவுகள் என்றும் எம்மனதில் நீங்காதனவாகவே இருக்கும்.

அவர் நீண்ட ஆயுளுடனும், நலமாகவும் வாழ நல்லூர்க் கந்தனை பிரார்த்திப்போமாக.

ச. ரவிசங்கர்,
மாணவ முதல்வர் சபை தலைவர் (94/95)
யாழ். மத்திய கல்லூரி.

## கடமையில் திளைத்தவர்

1992ஆம் ஆண்டு நான் மட்டக்களப்பில் இருந்து வந்ததுமே எனது கல்லூரியின் அதிபர் குறித்து நிறையக் கேள்விப்பட்டேன். நான் அவரைச் சந்திக்க நேர்ந்தபோது வெண்ணிற ஆடையுடன் காணப்பட்டார். அவரைப் பார்த்ததும் எனக்கு மிசனரிக் குருவானவர்களின் ஞாபகமே வந்தது. உண்மையிலேயே அவர் தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்து தனது கடமையில் முழுமையாகத் திளைத்தவராகப் பணியாற்றினார்.

இன்று அவர் தனது சேவையில் இருந்து ஓய்வுபெற்றாலும் அவரது முழு மூச்சும் கல்லூரியிலேயும் அதன் வளர்ச்சியிலேயும் இருக்கும் என்பது எனது எண்ணம். அவரது கனவு நனவாகும் வரை ஆதரவு கிட்டும் என்று வாழ்த்தி மெதடிஸ்த திருச்சபை சார்பில் இறையாசி கூறுகின்றேன்.

அருட்திரு. சி. சா. கருணைராஜ்,
உப தலைவர்,
பழைய மாணவர் சங்கம், யா. ம. க,
அக்கிராசனர் மெதடிஸ்த திருச்சபை,
வடக்கு - கிழக்கு திருமாவட்ட அவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒவ்வாத பார்வை

ஸ்ரீ லங்கா மக்களைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாப்பதற்குப் பயங்கரவாதம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். —

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் எமக்கு நல்லதொரு பாடத்தைப் புகட்டுகிறது. இனிமேல் நாம் அமைதியாகவும், புத்திக்கூர்மையுடனும் செயற்படுவோம்—

கடந்த புதன்கிழமை மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பாக, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு குறிப்பிட்டார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை அவர் வெறும் பயங்கரவாத நடவடிக்கையாக மட்டுமே பார்க்கிறார். அதன் அரசியல் தன்மையை, அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பை பார்க்க மறந்துவிட்டார்; மறைக்க முயல்கிறார்.

நெருப்பை நெருப்பால் தான் அணைக்கலாம் என்று நினைத்து சந்திரிகா செயற்பட முனைவது நாட்டில் மேலும் பேரழிவுகளை ஏற்படுத்தும். தமிழர் தரப்பில் இதுவரை பேரழிவுகள் உண்டாகியது போலவே, சிங்களவர் தரப்பிலும் பேரழிவுகளைக் கொண்டு வரும்.

சந்திரிகாவுக்கு முன்னர் பதவிக்கு வந்த சிங்கள ஆட்சித் தலைவர்கள் தமது படைகள் ஊடாக தமிழர்கள் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள்; ஊக்கமளித்தார்கள்; வளர்த்தார்கள். அந்த அடக்குமுறை, ஆக்கிரமிப்புகளில் இருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வு தமிழர் மனங்களில் கிளர்ந்தது. அதனால் அரச பயங்கரவாதத்துக்கு எதிராகத் தமிழர்கள் போராடத் தொடங்கினார்கள். ஆனால் சிங்கள அரசுகள் இராணுவ, சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தை பயங்கரவாதமாகக் காட்டின.

அதே வழியில் சந்திரிகாவும் தமிழர் போராட்டத்துக்கு எதிராக அரச பயங்கரவாதத்தை மேலும் முடுக்கிவிட முயல்கிறார்; முனைகிறார்.

எனவே இவருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய புத்திக்கூர்மை இல்லை என்று கூறுவதனை விட அதனை தீர்க்க விருப்பமில்லை என்றே கொள்ளலாம்.

ஓர் இனத்தின் சுதந்திரத்தை மறுத்து, அவர்களின் விடுதலைக்கான எழுச்சியை இராணுவ அடக்குமுறை, ஆக்கிரமிப்பு மூலம் இல்லாமற் செய்துவிடமுடியாது. சம்பந்தப்பட்ட மக்களிடம் விடுதலை உணர்வு மழுங்காதிருக்கும் வரை இராணுவத் தீர்வினால் — அரச பயங்கரவாதத்தினால் — அவர்களின் போராட்டத்தைத் தோற்கடிக்க முடியாது.

இந்தச் சிறிய அரசியல் தேற்றத்தைப் புரிந்து கொள்ள முடியாதவர்களில் சந்திரிகாவும் ஒருவராகிறார். எனவே அவர் நாட்டின் பொருளாதார உயிர் நாடியான மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருந்தும் பாடம் படிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஆகையால்—

சந்திரிகா தமது உரையில் பாடம் படித்துள்ளதாகக் கூறியதும், புத்திக்கூர்மையாக நடந்துகொள்வதாகச் சொன்னதும் ஆக்கபூர்வமற்ற அழிவு மலிந்த விளைவை— பெறுபேற்றை— நாடியதாகவே அமையும்.

# எதுவித பயனும் இல்லாத நிலையில்
# கிழக்கில் 3 ஆவது ராணுவ நடவடிக்கை

சாவகச்சேரி, பெப். 3

முன்னர் இரு படை நடவடிக்கைகளால் எதுவித பயனும் கிடைக்காத நிலையில் தற்பொழுது மூன்றாவது படை நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா படையினர் மட்டக்களப்பில் மேற்கொண்டுள்ளனர்.

வலையிறவு பாலம் ஊடாக வவுணதீவுக்கு சென்ற படையினர் அங்கு முகாம் ஒன்றை அமைத்துவிட்டு அங்கிருந்து மூன்றாம் கட்டை உன்னிச்சை பகுதிக்கு சென்றுள்ளார்.

பழுகாமத்தில் இருந்து இராணுவ அணி ஒன்று வாகரைப் பகுதி நோக்கி நகர்ந்ததுள்ளது.

மற்றொரு அணி பதுளை வீதியூடாக தம்பனா வெளிக்குச் சென்றுள்ளது.

இந்நடவடிக்கைகளின் போது படையினர் கனரக வாகனங்கள், டாங்கிகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றனர்.

பரவலாக ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது. (இ–3)

## எல்லைக் கிராமங்களில் படையினர் குண்டு வீச்சு

மட்டக்களப்பில் படை நடவடிக்கை ஒன்றை படையினர் ஆரம்பித்துள்ள வேளையில், எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்கள் மீது விமானப் படையினர் கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்துகின்றார்கள்.

பொலன்னறுவையில் உள்ள ஹிங்கிராங்கொட விமான நிலையத்தில் தரித்து நின்று விமானங்கள் இத்தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றன.

தினமும் 4 விமானங்கள் இத்தாக்குதல்களை மட்டக்களப்பில் எல்லைப்புறத்தில் உள்ள தமிழ்க் கிராமங்கள் மீது மேற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஹெலி சூடு இளைஞன் காயம்

கரடியனாறுப் பகுதியில் நடந்த செவ்வாய்க்கிழமை ஹெலி ஒன்று நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் யோகராசா (27 வயது) என்பவர் படுகாயமடைந்தார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

03 — 02 — 1996

இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8.02 — நீங்கள் கேட்டவை
★ 8. 30 — செய்திகள்.
★ 8. 40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

04 — 02 — 1996

காலை

★ 7.00 — ஆரம்பம்
★ 7-02 — மாவீரர் வணக்கம்
★ 7.10 — களத்தில் மலர்ந்தவை.
★ 7. 30 — செய்திகள்
★ 7. 35 பத்திரிகைச் செய்திகள்
★ 7.45 — அறிவிப்புகள் — தொடர்ந்து 8-00 மணி வரை தாயகப்பாடல்கள்

## நிதித்துறை அறிவித்தல்
## வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு நாளை 4 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கோரி உள்ளது.

★ சிவகுருநாதன் நித்தியானந்தன் — இல 108, G. B. ப் றோட். கல்வியன்காடு.

★ சறோஜினிதேவி செல்வராசா — சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

★ வசந்தரஞ்சிலி சோமசுந்தரம் — வாட். இல 4, மண்டைதீவு.

★ செல்வி நாகமுத்து — தாய்வீடு, சூசையப்பர் கோவிலடி, கோப்பாய்.

★ கணபதிப்பிள்ளை சிவசுந்தரம் — கும்பிளாவளை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

★ தில்லைநாதன் சிவநாதன் — புகையிரத வீதி, சுன்னாகம்.

★ சின்னம்மா ஐயாத்துரை — பழைய தபாற் கந்தோர் வீதி, சங்கானை.

★ அனித்தா செல்வநாயகம் — இல. 44, சோமசுந்தரம் அவெனியூ,, யாழ்ப்பாணம்.

★ தர்மாவதி சுப்பிரமணியம் — இல. 107 நந்தாவில் அம்மன் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

★ வள்ளிநாயகி நிரஞ்சன் — இல. 52, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு.

★ எஸ். இராசபூரணம் — இல. 87, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு.

★ பராசக்தி சிவசுந்தரலிங்கம் — டச்சு றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

★ வள்ளியம்மை கதிரவேலு — கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

★ சகாயராணி அந்தோனிப்பிள்ளை — இல. 13/06, தண்ணீர் தொட்டி றோட், குருநகர்.

★ நன்னித்தம்பி அரசரெட்ணம் — கொத்தியாவத்தை, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

★ திருமதி லோகநாயகி சண்முகலிங்கம் — தியாகி சிவகுமாரன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

★ தவமணி மாணிக்கம் குமரேசு — முருகமூர்த்தி வீதி, சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.

★ சரஸ்வதி சின்னத்துரை — நாவலம்பதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

★ அமிர்தநாதன் யேசுதாசன் — இல 01, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

★ மேரிதிரேசா அலோசியஸ் அல்லது ஜெஸ்மினா அலோசியஸ் — இல. 16/03, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி யோகம்மா கைலாசப்பிள்ளை அல்லது திருமதி கோகிலாராணி நகுலேஸ்வரன் — இல. 29/05, புகையிரத நிலையம் முன்பாக, புங்கன்குளம். அரியாலை.

★ திருமதி ராஜலட்சுமி தில்லைநாதன் — இல. 02, சுப்பிரமணியம் வீதி, அரியாலை.

★ திருமதி இரத்தினம் முத்தார் — மே/பா, யோகராணி சின்னையா சரஸ்வதி வீதி, செங்கத்திடல், புத்தூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

★ ஆறுமுகம் தம்பித்துரை — ''சந்திரவாசம்'', சாந்தை, பண்டத்தரிப்பு.

★ ஞானசபை சிவஞானம் — கதிரிப்பாய், அச்சுவேலி.

★ சந்திரமோகன் — தள்ளடி அம்மன் கோவிலடி, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. தில்லைநாதன் — சுவாமியார் வீதி, வலன்புறம், கொழும்புத்துறை.

★ பி. யேசுதாசன் — இல. 17/2, புது வீதி, கொய்யாத்தோட்டம்.

★ தவமணி மகேஸ்வரி — ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை நாயன்மார்கட்டு.

★ திருமதி லோகநாயகி கதிர்காமநாதன் — சங்குவேலி தெற்கு, மானிப்பாய் (தினேஸ் மரக்காலை).

★ தம்பியப்பா தங்கராசா — சூலானை, சுன்னாகம்.

★ ராசதுரை பத்மராசன் — தம்பலவத்தை, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

★ செல்லம்மா நாகலிங்கம் அல்லது ஜெயயோகராணி நாகலிங்கம் — அலுக்கை, அளவெட்டி. வடக்கு, அளவெட்டி.

★ குமாரசாமி புலேந்திர ஐயர் — நாதபூசனி அம்மன் கோவில், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

★ செல்லத்துரை சிறிகாந்தன் அல்லது திருமதி ராதிகா சிறிகாந்தன் — ஊராவில், காங்கேசன்துறை.

★ கந்தையா நடராசா — ஐயனார் கோவில் வீதி, (நீதிராஜா வீதி), கொக்குவில் மேற்கு.

★ காசிநாதர் ஐங்கரவேள் — நீர்வேலி தெற்கு. நீர்வேலி.

★ சரோஜினிதேவி ராஜரத்தினம் — மாரித்தோட்டம், தாவடி வடக்கு கொக்குவில்.

★ தவமணிதேவி பஞ்சாட்சரம் — இல. 12, நான்காம ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ சரோஜினிதேவி சண்முகராஜா — இல. 224/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ ராசமணி துரைராஜா — கந்தரோடை வடக்கு' சுன்னாகம்.

★ மாரிமுத்து செல்வராசா (தனலட்சுமி) — நவாலி தெற்கு, மானிப்பாய்.

★ சின்னத்தம்பி கணேஸ் — அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

★ சட்டநாதர் சதாசிவம் — சின்னக்குளம். கந்தரோடை, சுன்னாகம்.

★ சந்திரராணி பிறேமகுமார் — கரந்தன், நீர்வேலி.

★ ஆறுமுகம் ஈஸ்வரன் — ஆப்பிளானை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

★ திருமதி மனோண்மணி சரவணமுத்து— சுதுமலை கிழக்கு, அரசடி, மானிப்பாய்.

★ வேலாயுதபிள்ளை லோகநாஸ் — புண்ணியார் மடம், நாயன்மார்கட்டு.

★ இராமலிங்கம் பாக்கியரத்தினம் — வட்டுவினி, இணுவில் மேற்கு, இணுவில்.

★ திருமதி செல்வநாயகி பாலன் — நவக்கிரி, புத்தூர்.

★ சின்னையா அன்னமுத்து — பயித்தோலை, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

★ நடராசா சிறீதரன் — மே/பா K. V. சிவக்குமார், இல. 8279, ஜெயந்திநகர், கிளிநொச்சி.

★ P. சின்னத்தம்பி — சில்வாறோட், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

★ மயில்வாகனம் கர்ணகுமார் — மே/பா ச. தங்கவேலு கருவேலன் கண்டல், ஒட்டுசுட்டான்.

★ கனகாம்பிகை தியாகராசா — கட்சன் றோட், வட்டக்கச்சி

★ குமாரசாமி சதாசிவம், ஏழாலை கிழக்கு, ஏழலை.

★ இராயப்பு திருச்செல்வம் — மே/பா. அருளானந்தம், 4ஆம் குறுக்கு, 8ஆம் வாய்க்கால், உருத்திரபுரம், கிளிநொச்சி.

★ சிஸ்ரர் விக்ரோரியா — பறப்பாங்கண்டல, திருக்குடும்பம் கன்னியர்மடம், பறப்பாங்கண்டல், மன்னார்.

★ கேஸ்வரி லோகநாதன் — கரடிப்பிளவு, நெடுங்கேணி

★ இராயப்பு சேவையதாஸ் — வீட்டு இல. D2, மடுக்கோயில்.

★ அந்தோனிப்பிள்ளை பீற்றர் — மே/பா. ஏ. அமலதாஸ், பிறப்பாங்கண்டல், உயிலங்குளம், மன்னார்.

★ தேவநாயகி சண்முகம் — கட்டாடுவயல், இலுப்பைக்கடவை, மன்னார்.

★ இறாமகேது மாரிமுத்து — வர்ளந்தளம், மன்னரே.

★ எஸ். ஜே. டபிள்யூ. சுந்தரராஜா அல்லது திருமதி சுந்தரராஜா (சிவராணி)— இரணைப்பாளை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

★ ஜே. ராசநாயகம் — மே/பா பி. மனோண்மணி, கச்சேரி, கிளிநொச்சி.

★ மகேசன் மனோகரன் — மே/பா. எஸ். சிவலோகநாதன் இல 84/02, திருவையாறு. கிளிநொச்சி.

★ பிரசாந்தி தங்கராசா — அம்மன்கோவில் வீதி, மீசாலை வடக்கு, சாவகச்சேரி.

★ வேதநாயகி விநாயகமூர்த்தி— சுட்டிபுரம் கோயிலுக்கு முன்பாக, கொடிகாமம்.

★ கிருஷ்ணபிள்ளை யோகநாதன் — கிராமக்கோட்டடி, புலோலி மேற்கு, புலோலி.

★ வேலன் இராசையா — சங்கக்கடை, கலட்டி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுவாம்பிள்ளை மரியம்மா

திருமதி சு. மரியம்மா 02-02-96 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி லேனார் தம்பிமுத்து அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுவாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் திருமதி தங்கரெத்தினம், திருமதி தங்கமணி, திருமதி குணமணி, திரு. ஜெயராசா, திரு, ஜெயறெட்ணம் ஆகியோரின் தாயாரும் திரு. ஜயாத்துரை, திரு. சந்தியாப்பிள்ளை, திரு. தம்பிராசா, திருமதி ஜெ. றோஸ்மலர் ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்ற திரு. இராசையா காலஞ்சென்ற திரு. அ. பி. முத்தையா (உபதேசியார்) காலஞ்சென்ற திருமதி றோசம்மா, திரு அ. யோண்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்- முகாமையாளர் புனித வளன் அச்சகம்) திருமதி ம. இராசாத்தியம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

நல்லடக்கம் 02- 02- 96 அன்று மாலை 4. 30 மணியளவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திருமதி ஐ. தங்கரெத்தினம் (மகள்)
தபாற் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
(40606)

## இராமசேது நாகேஸ்வரி

அளவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்பொழுது கச்சாய் வீதி, கொடிகாமத்தில் வசித்து வந்தவருமான இராமசேது நாகேஸ்வரி அவர்கள் 02 - 02 - 1996 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் இராமசேதுவின் அன்பு மனைவியும், சிறீகரன் [நோர்வே], மனோகரன் (அவுஸ்ரேலியா), மனோகலா (கனடா), ரவிகரன் (கனடா), வசந்தகுமார் (வைத்தியர், மட்டக்களப்பு), திருமதி சிவாஜினி சிதம்பரதாசன் [அளவெட்டி மேற்கு], ரவிகலா (கொழும்பு) ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (3- 2- 96) சனிக்கிழமை பி. ப. 2 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றேன்.

தகவல்:
இராமசேது (கணவர்)
கச்சாய் வீதி,
கொடிகாமம்.
(தேவாலயம் அருகில்)
(40565)

## திருமதி வீரலட்சுமி கார்த்திகேசு

அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த திருமதி வீரலட்சுமி கார்த்திகேசு 1 - 2 - 1996 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கார்த்திகேசுவின் (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியர்) மனைவியும், திரு. விவேகானந்தனின் (ஆனந்தம் — ஆனந்தா ரேட்ஸ், நாவலடி, அல்வாய்) அன்புத் தாயாரும், புவனேஸ்வரியின் மாமியாரும், ஆனந்தராசன் (பிரான்ஸ்), ஆனந்தசிவம், ஆனந்தகுமார், ஆனந்தரமேஷ் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2 - 2 - 96 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. விவேகானந்தம் (ஆனந்தம்) (மகன்)
ஆனந்தா ரேட்ஸ்,
நாவலடி., அல்வாய்.
(40114)

## திருமதி ஆறுமுகம் தங்கம்மா
(நவரட்ணம்)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் தங்கம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ் சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், கதிர்காமநாதன் (கனடா), பத்மினிதேவி, கைலங்கிரிநாதன் (சுவிஸ்), கமலநாதன் (வட இலங்கை மருத்துவபீட மாணவன்), கணேசநாதன் (கனடா), பரமதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரதி (கனடா), சிவராஜா (இணுவில்), ரூத் (சுவிஸ்), மீனாம்பிகை (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், முத்தமிழரசி, தமிழ்வாணன் (லண்டன்), முத்தமிழ்பாவை, தமிழரசி, தமிழ்வேந்தன், இரியான் (சுவிஸ்), ஆர்த்திகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 3- 2- 96 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஆ. கமலநாதன் (மகன்)
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தற்போதைய முகவரி:
C/O V. செல்லப்பா
முருகமூர்த்தி கோவிலடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(40561)

# குண்டுவெடிப்பில் காயமடைந்த 7 தமிழர் விவரம்

கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களில் 70 பேரின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களில் தமிழர்களின் பெயர்கள் வருமாறு:-

பி. சுப்பிரமணியம் (கொட்டாஞ்சேனை), சிவநேசன் (வெள்ளவத்தை), கே. எஸ். சுப்பிரமணியம், ஏ. செல்வரத்தினம் (கொட்டாஞ்சேனை), தவதங்கராஜா (வெள்ளவத்தை), எஸ். செல்வி (தெகிவளை), சர்வநாதன் (வெள்ளவத்தை).

(இ-5)

## மத்திய .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர்களை கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் திஸநாயக்கா நேற்று அப்பகுதிக்குச் கூட்டிச் சென்று காட்டினார்.

இடிந்த கட்டடப் பகுதிகளை அகற்றும் பணி அங்கு நடைபெறுகின்றது. எனினும் மத்திய வங்கி கட்டடத்துக்கு நெருக்கமாகச் செல்வது ஆபத்தானது என எச்சரிக்கப்பட்டுள்ளதால் அங்கு இப்பணி இடம்பெறவில்லை.

மத்தியவங்கிக் கட்டடத்தின் மூன்று பகுதிகளில் நடுப்பகுதியில் உள்ள பாரிய தூண் — அதாவது முழுக் கட்டடத்துக்கும் பாதுகாப்பு வழங்கும் தூண் — பெருமளவு சேதமடைந்துள்ளது. அது சற்று விலகுமாயின் முழுக் கட்டடமுமே இடிந்து விழுந்து நொருங்கிவிடும் என்று பொறியியலாளர்கள் எச்சரித்துள்ளனர். அதனால் அங்கு சுத்திகரிப்புப் பணியை தற்போதைக்கு ஆரம்பிக்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வங்கியின் முன்பக்க 'போர்ட்டிக்கோ' அப்படியே சரிந்து நிலத்துக்குள் புதைந்துள்ளதால் கட்டடத்துக்குள் நுழைவதற்கு வாய்ப்பில்லை என்றும் —

கட்டடத்தொகுதியின் மத்திய பகுதி அப்படியே சரிந்து விழும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் —

அங்கு சென்றிருந்த செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

அரச பகுப்பாய்வாளர்கள் திட்டவட்டமான முடிவு எடுக்கும் வரை எஞ்சியுள்ள மத்திய வங்கிக் கட்டடத்துக்குள் எவரும் நுழைவதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் —

வங்கியின் தங்கம் மற்றும் பணநோட்டு சேமிப்புக் களஞ்சியமாக செயற்பட்ட — நிலத்துக்கு கீழ் அமைந்திருந்த — மாடியிலிருந்து நேற்று திடீரென தீச்சுவாலை கிளம்பியிருக்கின்றது.

உடைந்த கொங்கிறீட் இடிபாடுகளினால் மூடப்பட்டிருக்கும் நிலவறையிலிருந்து எழுந்துள்ள தீச் சுவாலையை அணைப்பதற்காக சுமார் 15 தீயணைப்புப் படையினர் தூரத்தில் நின்றவாறு தீச்சுவாலை எழுந்த பகுதியை நோக்கி நீரை தரையாக சொரிந்து கொண்டிருந்ததாகப் பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

நிலவறைப் பகுதிக்கு செல்ல முயற்சிப்பது மிக ஆபத்தானது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(உ-3-6-7)

## 30 பேரின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவில் உள்ளதாகவும் —

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இந்தியன் ஓவஸிஸ் வங்கி அதிகாரிகள் இருவருக்கு நேற்று அவசர சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [illegible] 7 [illegible] யில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(இ-3)

# மேலும் 5 சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன

கொழும்பு, பெப். 3

மத்திய வங்கி குண்டு வெடிப்பால் சேதமடைந்த பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணியின் போது மேலும் 5 சடலங்கள் மீட்கப்பட்டன.

இதில் இரு சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று சிறு குழந்தையின் உடையது. மற்றைய சடலம் பெண்ணின் உடையது.

இதற்கிடையில் கொழும்பு ஆஸ்பத்திரியின் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நேற்றும் ஒருவர் இறந்தார்

# சீனாவில் குண்டுவெடிப்பு 150 பேர் பலி

சீனாவில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பில் 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

நிலத்தின் கீழ் உள்ள அறையில் வைக்கப்பட்டிருந்த 100 தொன் நிறையுடைய டைனமேற் வெடித்ததில் இந்த சேதம் ஏற்பட்டது.

# நேற்றுவரை 30 பேர் கைது

மத்திய வங்கி குண்டு வெடிப்புத் தொடர்பாக நேற்று வரை 30 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் புறக்கோட்டை வர்த்தகர் ஒருவரும் அடங்கி உள்ளார். கைதான மற்றும் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர்.

படையினரும் பொலீஸாரும் மிகப் பெரிய அளவில் நேற்று கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தேடுதல் நடத்தி உள்ளனர்.

புறக்கோட்டை வர்த்தகர் குண்டு சூத்திரதாரிகளுக்கு புகலிடம் அளித்தவர் என பிரதிப் பொலீஸ் மா அதிபர் மித்ரா ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

(இ-3)

## பணநோட்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மத்திய வங்கியின் பணநோட்டு சேமிப்புக் களஞ்சியம் நிலவறையுடன் மூடப்பட்டு விட்டதால் புதிய பணநோட்டுகளை புழக்கத்திற்கு விடமுடியாத இக்கட்டான நிலையில் அரசு இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பணநோட்டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதை அடுத்து நேற்று முதல் தென்னிலங்கை வங்கிகளில் வாடிக்கையாளர் ஒருவருக்கு ஒரு முறையில் ஆகக் கூடியது 10 ஆயிரம் ரூபாவுக்கே பணநோட்டுக்கள் வழங்கப்படுவதாக செய்தி நிறுவனங்கள் அறிவித்தன.

(உ-7)

## ஏற்கனவே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக ''த ஐலண்ட்'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜனவரி 19 திகதியிடப்பட்ட எல்லாளன் படையின் அக்கடிதத்தில் கொழும்பு நகரை ஸ்தம்பிதம் அடையச் செய்யப் போவதாக எச்சரிக்கப்பட்டிருந்தது.

உல்லாசப் பயணிகளை ஸ்ரீலங்காவுக்கு வரவேண்டாம் என அந்த அமைப்பு ஏற்கனவே எச்சரித்திருந்தது என்றும் ''த ஐலண்ட'' சுட்டிக்காட்டியுள்ளது.

[உ- 3]

# தொடர்பு கொள்ளவும்

நாயன்மார்கட்டில் வசித்த திருமதி சிவாஜினி பற்குணமாணிக்கம் (மேக்கப் செய்பவர்) உடனடியாக பருத்தித்துறை வீதி, வரணியிலுள்ள வரணி மருந்தகத்தில் தொடர்பு கொள்ளவும்.

(40559)

# அறிவித்தல்

புத்தூர் சந்தி வணிகர் மன்றத்துக்குள் அமையும் — தேனீர் கடை, சைக்கிள் கடை, மருந்துக் கடை தவிர்ந்த — சகல வர்த்தக நிறுவனங்களும் ஞாயிற்றுக் கிழமைகளில் தங்கள் வர்த்தக நிறுவனங்களை மூடி ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்.

புத்தூர் சந்தி வணிகர் மன்றம்

குறிப்பு: இதுவரை பதிவு செய்யத் தவறியவர்கள் பதிவு செய்து கொள்ளவும்.

(40564)

# மரண அறிவித்தல்

## தம்பித்துரை அருளப்பு ஜெயராசா
(சில்லாலை)

யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும், தற்போது கொல்லர்புளியங்குளத்தில் வசித்தவருமாகிய தம்பித்துரை அருளப்பு ஜெயராசா காலமாகிவிட்டார்.

அன்னார் பிறக்சீடாலில்லியின் அன்புக் கணவரும், யூட் வசந்தகுமாரின் (சவூதி அரேபியா) அருமைத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (3 - 2 - 96) சனிக்கிழமை காலை 8·30 மணியளவில் கொல்லர்புளியங்குளம் மாங்குளத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லில்லி (மனைவி)
கொல்லர்புளியங்குளம்,
(யாழ். வீதி)
(40459)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் [illegible] அவர்களது தற்காலிகப் பணிமனையில் 03-02-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org